எம்.சி.ஓ.பி எண்: 3996/2019 தேதி: 09.01.2026

மசா. : 4

பெயர் : வெங்கடேசன்

த/பெ. : சின்னப்பா

வயது : 46

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 23 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இயக்கி வரும் சங்கத்தில் 50 பேர் வேலை பார்க்கிறார்கள். அதற்கான வருகை பதிவேடு பராமரிக்கிறோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தான் நெசவாளர் சங்கத்தின் தலைவர் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எங்கள் சங்கத்திற்கு சீல் கிடையாது. மசாஆ 11,12 ஆவணத்தில் எங்கள் சங்கத்தின் சீல் போடப்படவில்லை என்றால் சரி. எங்கள் சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கம் தான். ஆனால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி. சம்பளம் எதை வைத்து கொடுப்பீர்கள் என்றால் தினம் தினம் சம்பளம் கொடுப்போம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனவே மசாஆ 11,12 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.